මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல :LAE/2025/89** **2025.05.03**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகங்களின் அலங்கரிப்புக்களை அகற்றுதல்

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கும், தேர்தல் சட்ட மீறல்களைத் தடுப்பதற்கும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலக பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் விடயங்களைப் பின்பற்றியொழுகுவதன் மூலம் அனைத்து வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், பிரதேச முகவர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

- உள்ளூர் அதிகார சபைகள் மட்டத்திலும், வாக்கெடுப்பு வட்டாரங்கள் மட்டத்திலும் நிறுவப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் கூட, அந்த அலுவலகங்களை அறிமுகப்படுத்தும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட 60 சதுர அடியை விஞ்சாத விளம்பரப் பலகையைத் தவிர, ஏனைய அனைத்து விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள் அல்லது அலங்காரக் காட்சிகள், மற்றும் வேட்பாளர் பயணிக்கும் வாகனத்தில் காட்சிப்படுத்தப்படும் விளம்பரம் மற்றும் வேறு எந்த வகையான பிரச்சார நடவடிக்கைகளும் **2025.05.03** ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படக்கூடாது. மேலே குறிப்பிடப்பட்ட 60 சதுர அடியை விஞ்சாத அனுமதி வழங்கப்பட்ட பலகையில், கட்சி/சுயேச்சைக் குழுவின் பெயர் மற்றும் வட்டாரம் தவிர வேறு ஏதேனும் புகைப்படங்கள், சின்னங்கள் அல்லது சொற்பிரயோகங்கள் இருப்பின் அவையும் மறைக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களை மீறி இயக்கப்படும் அலுவலகங்களை பரிசோதிப்பதற்கு, மாவட்ட/பிரதேச முறைப்பாடுகள் முகாமைப் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அலுவலர்கள் மற்றும் விசாரணை அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் **2025.05.04** ஆம் திகதி காலை வருகைத்தருவர். அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட கட்சி அலுவலகங்களில் உள்ள விளம்பரப் பலகைகளை அகற்றும் பணி **2025 மே மாதம் 4** ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படும். மேலும் தேர்தல் சட்டத்தின்படி செயல்படாத அலுவலகங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்